

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (26.12.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக ஜமுனாமரத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புதிய மருத்துவ கட்டிடங்களை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், குழும இயக்குநர், தேசிய நலவாழ்வு குழுமம் திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டம் மரு. அருண்தம்புராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை (திருவண்ணாமலை), எம்.எஸ்.தரணிவேந்தன் (ஆரணி), சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), எஸ்.அம்பேத்குமார் (வந்தவாசி), பெ.சு.தி.சரவணன் (கலசப்பாக்கம்), ஒ.ஜோதி (செய்யாறு), உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளிடம் குறை கேட்பு கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு மனுக்களை பெற்று பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் ஆர்.டி.அரசு, எல்.இதயவர்மன், உதயா கருணாகரன், நகரச் செயலாளர்கள் எஸ்.நரேந்திரன், ஜெ.சண்முகம், ஒன்றியச் செயலாளர் பையனூர் சேகர், ஊராட்சி மன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பலர் உடனிருந்தனர்.

# நவீன மலையாள இலக்கியத்தின் முகங்களில் ஒருவராக விளங்கியவர்!

## மலையாள எழுத்தாளர் எம்.டி.வாசுதேவன் மறைவுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, டிச. 27-**

**ஞானபீடம் உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்ற மலையாள எழுத்தாளர் எம்.டி.வாசுதேவன் அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், “நவீன மலையாள இலக்கியத்தின் முகங்களுள் ஒருவராக விளங்கியவர், எம்.டி.வாசுதேவன் அவர்கள்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

ஞானபீடம், பத்மபூஷன், சாகித்ய அகாடெமி உள்ளிட்ட உயர் விருதுகளை வென்ற மலையாள எழுத்தாளர் திரு. எம்.டி. வாசுதேவன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருந்துகிறேன்.

நாலுகெட்டு, அசுரவித்து, மஞ்ஞு, காலம் போன்ற நாவல்கள், நிர்ம்மால்யம், பெருந்தச்சன், ஒரு வடக்கன் வீரகாத போன்ற திரைப்படங்கள் வழியே கேரள மாநிலத்தின் சமூக மாற்றங்களை மிக நுணுக்கமாகப் படம்பிடித்துக் காட்டிய படைப்பாளராக அவர் திகழ்ந்தார்.

தமிழ், ஆங்கிலம் முதலிய பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட அவரது நூல்களின் வழியே, மலையாளிகளைக் கடந்த பெரும் வாசகப் பரப்பைச் சொந்தமாக்கிக் கொண்டவர் அவர். மலையாளத்திரையுலகின் கிளாசிக்குகள் எனக் கருதப்படும் பல படங்களுக்கு வாசுதேவன் அவர்கள் திரைக்கதை எழுதியதோடு, தாமே சில படங்களை இயக்கவும் செய்திருக்கிறார், தேசிய விருது முதலிய விருது களையும் பெற்றிருக்கிறார்.

எழுத்தாளர், திரைக்கதையாசிரியர், இயக்குநராக மட்டுமன்றி மாத்ருபூமி இதழின் ஆசிரியராக இருந்து, பல இளம் எழுத்தாளர்களை அடையாளம் கண்டு வளர்த்தெடுத்த வகையில் மலையாள மொழிக்கும் கேரளச் சமூகத்துக்கும் அவர் ஆற்றிய பங்களிப்புகள் பல தலைமுறைகளுக்கு அவரது பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கும்.

நவீன மலையாள இலக்கியத்தின் முகங்களுள் ஒருவராக விளங்கிய எம்.டி. வாசுதேவன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உலகம் முழுவதும் உள்ள அவரது வாசகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.





சென்னை, அயனாவரம், நல் மேய்ப்பர் லுத்திரன் திருச்சபை தேவாலயத்தில் நடைபெற்ற தேவாலய நூற்றாண்டு நிறைவு விழா நடைபெற்றது இதில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார் உடன் திரு.வி.க.நகர சட்ட மன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, பாதிரியார்கள் கேம் செல்வராஜ், டானியல் விக்டர், ஆதிஸ் அட்னாட்டு, சாமுவேல், சுரேஷ்குமார், ஸ்டான்லி ஜோசப் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ப.ச. கமலேஷ் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

## சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட

# பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கூடுதலாக 15 இரத்த அழுத்த பரிசோதனைக் கருவிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை,டிச.27-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நோயாளிகள் மருத்துவ செலவினங்களால் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படுதல், நேரமின்மை மற்றும் உதவிக்கு ஆட்கள் இல்லாத காரணங்களால் மருத்துவமனைகளுக்கு செல்ல இயலாமை ஆகியவற்றால் பாதிக்கப்படாமல் தடுக்க “மக்களை தேடி மருத்துவம்” திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகின்றார்கள்.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் பொதுமக்களின் வீட்டிற்கே நேரடியாக சென்று தொற்றா நோய்களுக்கான பரிசோதனை செய்தல், தேவைப்படும் மருந்துகளை வழங்குதல், தசை சிதைவு, பக்க வாதம் உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உடல் உறுப்புகளை இயக்க பயிற்சி அளித்தல் (இயன்முறைச் சிகிச்சை), இயலா நோயாளிகளுக்கு வழங்ககூடிய வலி நிவாரணம், ஆதரவு சிகிச்சை ஆகியவற்றை உள்ளடக்கிய மருத்துவ சேவைகள் அளிக்கப் பட்டு வருகின்றது.

மேலும், இத்திட்டத்தின் மூலம் இரத்த அழுத்த பரிசோதனை, இரத்தத்தில் சர்க்கரை அளவு கண்டறிதல் ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளுதல், நோயாளிகளை பராமரித்தல், அத்தியாவசிய மருத்துவ சேவைகளுக்கான பரிந்துரை, குழந்தைகளின் பிறவிக்குறைபாடுகளை கண்டறிந்து தெரிவித்தல் போன்ற ஒரு குடும்பத்திற்கு தேவையான அனைத்து சுகாதாரத் தேவைகளை வழங்குவதுடன் தொடர்ந்து கண்காணிக்கவும் வழிவகை செய்யப் பட்டுள்ளது.

சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ஜாம்பஜார், லாயிட்ஸ் காலனி, திருவல்லிக்கேணி, சேப்பாக்கம், கிருஷ்ணாம்பேட்டை ஆகிய 5 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. சேப்பாக்கம் - திருவல்லிக்கணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் ஒரு பிசியோதெரபிஸ்ட், 10 செலிலியர்கள், 20 பெண் சுகாதார தன்னார்வலர்கள் பொதுமக்களின் வீடுகளுக்கு சென்று சிகிச்சை அளித்து வருகின்றனர்.

சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உயர் இரத்த அழுத்த பாதிப்புக்குள்ளான 45,303 நோயாளிகள், 15,700 சர்க்கரை நோயளிகள், இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் என இரண்டு நோய்களாலும் பாதிப்புக்குள்ளான 19,005 நோயாளிகள், தசை சிதைவு, பக்க வாதம் உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட 180 நபர்களுக்கும் என மொத்தம் 80,188 நபர்களுக்கு மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் தொடர் சிகிச்சை மற்றும் மருந்து, மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.12.2024) சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 5 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் ”மக்களைத்தேடி மருத்தும்” திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு பரிசோதனை மேற்கொள்வதற்காக கூடுதலாக உதயநிதி ஸ்டாலின் அறக்கட்டளையின் மூலம் 15 இரத்த அழுத்த பரிசோதனை கருவிகளை மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களிடம் வழங்கினார்.

## கழக த.ரமேஷ் தலைமையில்

# சென்னை தெற்கு மாவட்ட நெசவாளர் அணி சார்பில் தெருமுனை கூட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் நல உதவிகள் வழங்குகிறார்!

சென்னை, டிச.27-

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. நெசவாளர் அணி சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் தெருமுனை கூட்டம் மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (27.12.24 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு வேளச்சேரி எம்.ஜி.ஆர். நகர் 11-வது தெருவில் நடைபெறுகிறது.

இக் கூட்டத்திற்கு நெசவாளர் அணி மாவட்ட அமைப்பாளர் கழக த.ரமேஷ் தலைமை வகிக்கிறார்.

அரிமா சு.சேகர், வே. ஆனந்தம், பெ.மணிமாறன், எஸ்.பாஸ்கரன், மகேஷ்வரி முருகவேல், த.ஜெகதீசன், முகேஷ் கண்ணா, கே.என். தாமோதரன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

எல்லப்பன், சம்பந்தம், நடராசன், நரேஷ் குமார், கருணாநிதி, மோகன் தாஸ், ரகு, வெங்கடேசன், செந்தில் குமார், செல்வம், நந்தகுமார், கோடீஸ்வரன், சீனிவாசன், மன்மத ராஜ், மதன் ராஜ், ரவி கேசவன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் சிறப்புரை ஆற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

மேலும் இக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் கோபி குமணன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ஜெ.எம்.எச்.அசன் மௌலானா எம்.எல்.ஏ., மேயர் பிரியா ராஜன், அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., க.கணபதி எம்.எல்.ஏ., ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ., துணை மேயர் மு. மகேஷ் குமார், இளம் பேச்சாளர் மா. பூபதி ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

ஆர்.ராஜசேகர், ஏ.பி, பிஜீ, எம்.சச்சிதானந்தம், வி.செந்தில் ராஜ் ஆகியோர் நன்றியுரை கூறுகின்றனர்.

## சந்தோஷ் ஜெய் தலைமை! கே.கண்ணன் எம்.சி - மு.ராசா எம்.சி. முன்னிலை! கலைஞர்நகர்

# 138 (அ) வட்டத்தில் துணை முதல்வர் பிறந்தநாள் தெருமுனைக் கூட்டம் - நலஉதவிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி - ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, டிச. 27 -

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் தெற்குப் பகுதி, 138 (அ) வட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 547 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி தெருமுனைக் கூட்டம் இன்று (27.12.2024 - வெள்ளிக்கிழமை) மாலை 6:00 மணிக்கு, சத்தியமூர்த்தி பிளாக் - ஜான் கென்னடி தெருவில் நடைபெறுகிறது.

தலைமை கழக இளம் பேச்சாளர் சந்தோஷ் ஜெய் தலைமை வகிக்கிறார்.

பகுதிக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் கே.கண்ணன், மு.ராசா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், விருகம்பாக்கம்

சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகராஜா பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

மேலும் தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன் எம்.சி, மாநில வர்த்தக அணிச் செயலாளர் காசி முத்து மாணிக்கம், கலைஞர் நகர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் வே.உமா காந்த், மாவட்ட துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், தலைமை பொதுக் குழு உறுப்பினர்கள் உ.துரைராஜ், எஸ்.தங்கராஜ், பி.எஸ்.முருகேசன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் சசிகுமார், கனிமொழி தனசேகரன், நிஷா சையத், வட்டக் கழகச் செயலாளர் பி.கே.குமார், அ.கதிரேசன், பூக்கடை பழனிச்சாமி, இரா.செழியன், செந்தில்குமார், சதீஷ் கண்ணன், எஸ்.மைக்கேல், வீ.ஏ.ராஜா, மு.கோவிந்த ராஜன், பழக்கடை பாஸ்கர், தஞ்சை பாபு,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் விநாயகமூர்த்தி, ஜெ.பாண்டி யன், கிருஷ்ணகுமார், சங்கர் கணேஷ், ராமாபுரம் ரவி, கா.வீ. தியாகராஜன், கோட்டூர் பிரகாஷ் மற்றும் பாரி நகர் சசி, சண்முகம், ஜம்பு முருகன் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.



செங்குன்றம் பேரூராட்சிக்குட்பட்ட 18 வது வார்டு கால்வாய் கரை தெரு பகுதியில் சுமார் 500க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இந்தப் பகுதியில் மழைக்காலங்களில் தண்ணீர் தெருவில் குளம் போல் தேங்கி நிற்கும். இதனால் அப்பகுதி மக்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வந்தனர். இதனால் அப்பகுதி மக்கள் 18 வது வார்டு தி.மு.க. செயலாளரும் வார்டுக் கவுன்சிலருமான கோதண்டராமனை நேரில் சந்தித்து மழைநீர் கால்வாய் அமைக்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர். அக்கோரிக்கையின் அடிப்படையில் பேரூராட்சி சார்பில் ரூபாய் 43 லட்சம் மதிப்பீட்டில் சுமார் 145 மீட்டர் தூரத்தில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி பேரூராட்சி தலைவர் தமிழரசி குமார் தலைமையிலும் துணைத் தலைவர் விப்ர நாராயணன், கோதண்டராமன் எம்.சி. முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஆர்.டி.குமார், செல்வகுமார், சங்கர், வெங்கடேசன், ஜானகிராமன், பாபு, நரேந்திரன், ஜெகதீசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின்

# சரஸ்மேளா - மாபெரும் விற்பனைக் கண்காட்சி!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் – இன்று தொடங்கி வைக்கிறார்!

சென்னை, டிச. 27 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் வகையிலும், அவர் களின் தயாரிப்புப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், மாநில / மாவட்ட / வட்டார அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகள், மதி அனுபவ அங்காடி, மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள், மதி அங்காடி, மதி இணையதளம், மதி சிறுதானிய உணவகம், இயற்கைச் சந்தைகள் மற்றும் விற்பனைக் கண்காட்சிகள் என பல்வேறு செயல்பாடுகள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்டு வருவதன் வாயிலாக இன்று சுய உதவிக் குழுக்கள் பொருளாதார முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சித் துறையானது கிராமப்புற கைவினைக் கலைஞர்கள் தங்களின் தயாரிப்புப் பொருட்களை காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் ஏதுவாக பல்வேறு மாநில அரசுகளுடன் இணைந்து ‘சரஸ்’ (SARAS) எனப்படும் விற்பனை கண்காட்சிகளை நடத்தி வருகிறது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (27.12.2024) மாலை 4.00 மணியளவில் சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் சரஸ்மேளா மற்றும் மாநில அளவிலான மாபெரும் விற்பனைக் கண்காட்சியினை துவக்கி வைக்க உள்ளார்.

இந்தக் கண்காட்சியில், ஆந்திரா மாநிலத்தின் அழகிய மரச் சிற்பங்கள், கொண்டப்பள்ளி பொம்மைகள், குஜராத் மாநிலத்தின் கைத்தறி ஆடைகள், பீகார் மாநிலத்தின் மதுபாணி ஓவியங்கள், கேரள மாநிலத்தின் பாரம்பரிய உணவு வகைகள் மகாராஷ்ட்ரா மாநில கோண்ட் பழங்குடியினரின் வண்ண ஓவியங்கள் உள்ளிட்ட கலைநயம் மிகுந்த கைவினைப் பொருட்கள் விற்பனை செய்யப்படவுள்ளன.

மேலும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களான தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள், நாச்சியார்கோவில் குத்து விளக்குகள், கடலூர் முந்திரிப் பருப்பு, தருமபுரி சிறுதானிய தின்பண்டங்கள், ஈரோடு தரை விரிப்புகள், காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், கன்னியாகுமரி வாழை நார் பொருட்கள், நாமக்கல் கொல்லி மலை அரபுளி காபித் தூள், கரூர் கைத்தறி துண்டுகள், சிவகங்கை பாரம்பரிய அரிசி வகைகள், திருவண்ணா மலை ஜவ்வாது மலை தேன், சிறுதானியங்கள், தூத்துக்குடி பனை பொருட்கள், பனை வெல்லம் (கருப்பட்டி), விழுப்புரம் சுடுமண் சிற்பங்கள், கோரைப் பொருட்கள், அலங்கார விளக்கு திரைகள், விருதுநகர் செட்டிநாடு புடவைகள், அரியலூர் முந்திரி பருப்பு, கோயமுத்தூர் மூலிகை சோப்புகள், திண்டுக்கல் சின்னாளப்பட்டி சேலைகள், திருச்சி செயற்கை ஆபரணங்கள், தேனி சானிடரி நாப்கின் மற்றும் திருநெல்வேலி அல்வா போன்ற பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

2024 டிசம்பர் 27ஆம் தேதி முதல் 2025 ஜனவரி 09ஆம் தேதி வரை நாள்தோறும் காலை 10.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை நடைபெறும் சரஸ் மேளாவில் உணவு அரங்குகள், பல்வேறு கலை நிகழ்ச்சிகள், இலவசமாக வாகனங்கள் நிறுத்துமிடம் போன்ற அம்சங்கள் நிறைந்துள்ளன. இக்கண்காட்சிக்கு அனுமதி இலவசம்.

இத்தகைய சிறப்புமிக்க சரஸ் மேளா மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் மாநில அளவிலான மாபெரும் விற்பனை கண்காட்சிக்கு பொதுமக்கள் அனைவரும் வருகை தந்து, பல்வேறு மாநில மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த தரமான பொருட்களை வாங்கி பயனடைவதோடு, மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிட வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை விழா மற்றும் கிறிஸ்துமஸ் விழாவையொட்டி திருவள்ளூர் மேற்கு மாவட்ட சிறுபான்மை அணி சார்பில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ., திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆலோசனைப்படி கடம்பத்தூர் ஒன்றியம் செஞ்சி ஊராட்சியில் உள்ள சி.எஸ்.ஐ. பள்ளியில் கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் பிரகாஷ் ஞானஒளி ஏற்பாட்டில் மாவட்ட அமைப்பாளர் சித்திக் அலி முன்னிலையில் நடைபெற்றது இதில் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன், ஒன்றிய செயலாளர் கே.அரிகிருஷ்ணன் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் இனிப்புகள் வழங்கினார் செஞ்சி ஊராட்சி மன்ற தலைவர் அறிவழகி ராஜ், மாவட்ட சிறுபான்மை அணி நிர்வாகிகள் த.அய்யூப் அலி, ஏ.பெருமாள், முகமது அஸ்லாம், மற்றும் கு.அன்பு, கொப்பூர் திலீப், மோகனசுந்தரம், சேகர், முனுசாமி, ஸ்ரீதர், ஆமோஸ், ஆல்வின், நிர்வாகிகள் பலர் உள்ளனர்.